**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**அசல் வழக்கு எண். 64/2020**

**வா.சா.1 – பாலகிருஷ்ணன்**

**25–06–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் B.Tec IT படித்துள்ளேன். எனது தாயார் பெயர் கோவிந்தம்மாள். எனது பெற்றோர்களுக்கு தாவா சொத்து எப்படி வந்தது என்றால் அரசாங்கம் ஒப்படைத்த கிரையம் மூலம் பாத்தியப்பட்டது. மேற்படி கிரையம் பொறுத்து ஏற்கவே 1ம் பிரதிவாதிக்கும், எனது பெற்றோர்களுக்கும் பிரச்சினை இருந்தது என்றால் இல்லை. எனது தகப்பனார் ராமசாமி இதே நீதிமன்றத்தில் 1ம் பிரதிவாதி மீது அ.வ. 59/2017 தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் அவருக்கும் அவரது மனைவி கோவிந்தம்மாளுக்கும் மேற்படி பூமி பட்டாப்படி பாத்தியப்பட்டது என்று விளம்புகை கோரி தாக்கல் செய்திருந்தார் என்றால் தெரியாது.

2. மேற்படி வழக்கில் தங்கமுத்துசாமி மற்றும் பெரியசாமிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது என்றால் தெரியாது. அந்த வழக்கில் நானும் ஒரு தரப்பினர் என்றால் சரிதான். அந்த வழக்கில் என்ன பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றால் கிரைய விளம்புகை கேட்டு தாக்கல் செய்துள்ளோம். கடந்த 05.02.2024 ல் நாங்கள் நடத்தாததால் அந்த வழக்கு தள்ளுபடியாகி உள்ளது என்றால் சரிதான். தள்ளுபடியான வழக்கு சொத்திற்கு செல்வதற்கு தடம் வேண்டும் என்று கேட்டுதான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் பூர்வீக தடம் கேட்டு தாக்கல் செய்துள்ளோம்.

3. அரசால் கிரையம் செய்து கொடுக்கப்பட்ட சொத்து என்பதே முடிவு செய்யப்படாத நிலையில் அதற்கு தடம் கேட்டு நான் தாக்கல் செய்துள்ள

இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் வட்டாச்சியரிடம் NOC மற்றும் சொத்துரிமை சான்று வாங்கி எனது பெயரில் கிரையம் செய்துள்ளேன். உண்மையில் அரசிடம் கிரையம் வாங்கி வாட்டாச்சியரிடம் NOC வாங்கியிருந்தால் விளம்புகை வழக்கை முழுவதும் நடத்தியிருப்பேன் என்றும், அவ்வாறு கிரையம் வாங்காததால் தான் வழக்கு தள்ளுபடிக்கு விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. எனது தந்தை காலமாகி விட்டதால் மேற்படி வழக்கை நடத்தவில்லை. தான செட்டில்மெண்ட் வாங்கிய பின் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

4. நான் சொல்வது போல் தான செட்டில்மெண்ட் வாங்கியிருந்தால் விளம்புகை வழக்கை நடத்தியிருப்பேன் என்றும் என்ன செய்தாலும் சொத்து எங்களுக்கு வராது என்பதால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்லும் பூர்வீக தடத்தை காண்பிக்க ஆணையர் நியமித்து அழைத்துச்சென்றேனா என்றால் அழைத்துச்சென்றேன். அதனை சரிவர செய்யாமல் ஆணையர் அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கு நிலுவையில் இருந்ததால் அளக்கவிடாமல் தடுத்துவிட்டார்கள். மேற்படி ஆணையர் மனுவை நீதிமன்றம் முடித்துவைத்தது என்றால் சரிதான்.

5. அதன் மீது நான் மேல் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் உயர் நீதிமன்ற வழக்கு முடிவதற்காக காத்திருந்தோம். நான் சொல்வது போல் எனக்கு அரசு கிரையம் கொடுத்த பூமி இல்லை என்றும், நான் உரிமை கோருவது போல் எனக்கு தடப்பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. உயர் நீதிமன்றத்தில் எங்களுக்கு ஆதரவாக தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தாவா தடத்தை நாங்கள் பயன்படுத்துவதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் உள்ளது, தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான் சொல்வது போல் எந்த ஆவணமும் இல்லை என்றும், நான் சொல்லும் தடமும் அங்கு இல்லை

என்று அந்த தடத்தை நான் எப்போது பயன்படுத்தியது இல்லை என்றால் சரியல்ல. அனைவரும் பொதுவாக பயன்படுத்திவருகிறோம். உண்மையில் தடம் இருந்திருந்தால் அதனை விளப்புகை செய்ய பரிகாரம் கேட்டு இருப்பேன் என்றும் அவ்வாறு தடம் இல்லாததால் தான் விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. )

(3 ம் பிரதிவாதி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒம்/- திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.